கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை**:** திரு.ஜி.சரண்**,B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

இடைக்கால மனு எண்.3/2024

-உள்- (அசல் வழக்கு எண்.2/2021)

1. வீரணன்
2. சரசு (எ) வெள்ளையம்மமாள்
3. செல்லப்பாண்டி
4. பூந்தேவி
5. ராஜப்பாண்டி ... மனுதாரர்கள்/வாதிகள்

...எதிர்..

1. சந்திரா
2.ராமசந்திரன்
3.ஜெயந்தி
4.ரஜாக் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு கடந்த 4.3.2025ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் எஸ்.விஜயக்குமார் மற்றும் எம்.முத்துக்கருப்பன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.சுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் எஸ்.இராஜாங்கம் மற்றும் சி.கிரீஸ்கந்தராஜா ஆகியோர்கள் ஆஜராகி, பின்னிட்டு 4ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாமையால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த மனுவில் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.....

உத்தரவு

1. மேற்கண்ட அசல் வழக்கு எண் 2/2021ல் கடந்த 10.07.2023ம் தேதி வாதிகளின் வருகையின்மை காரணமாக தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து மேற்படி அசல் வழக்கை மீண்டும் கோப்பில் எடுத்து மேல்நடத் உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/ வாதிகளால் இந்த மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 9 மற்றும் பிவி 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:

இந்த மனுவின் 1ம் மனுதாரர்/1ம் வாதி இந்த அபிடவிட்டினை தனக்காகவும், மற்ற மனுதாரர்கள் /வாதிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கானது இந்த வாதிகளால் பிரதிவாதிகள் மீது பாகபிரிவினை கோரி தாக்கல் செய்து மேற்படி வழக்கில் வாதி தரப்பு விசாரணைக்காக கடந்த 10.07.2023 தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி தேதியில் வாய்தா இந்த மனுதாரரின் தரப்பில் வருகையின்மையின் காரணமாக அசல் வழக்கானது தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி வாய்தா தேதியில் இந்த மனுதாரருக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததனால் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் ஆஜராக முடியவில்லை. மேற்படி செய்கை வேண்டு மென்றே ஏற்படுத்தப்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால் இம்மனு அனுமதிக்கப்பட-வேண்டும் இல்லாவிடில் இந்த மனுதாரர்களுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமும், கஷ்டமும் ஏற்பட்டுவிடும். மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம் :

தாவா மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதில்லை. மனுதாரர் மனுவில் தள்ளுபடியான அசல் வழக்கினை மீண்டும் கோப்பில் எடுக்கக் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதில்லை. இம்மனுவில் 1ம் மனுதாரருக்கு வாய்தா தேதியன்று காய்ச்சல் ஏற்பட்டது என்ற கூற்று உண்மை என்று வைத்துக் கொண்டாலும் மற்ற 2 to 5 வாதிகள் வழக்கை நடத்த முன் வராததற்கு எவ்வித காரணமும் சொல்லப்படவில்லை. வழக்கு 1984 ஆண்டு முதல் திண்டுக்கல் டி.மு. கோர்ட்டு O.S.NO.695/1984 ல் ஏற்பட்ட முதல் நிலைத் தீர்ப்பானை மற்றும் இறுதி நிலைத் தீர்ப்பானையின்படி E.P.NO. 261/2008 ல் ஒப்படப்புக்கு மனுச் செய்து 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தங்களுக்குண்டான பாகத்தை ஒப்படப்பு பெற்று சுவாதீனம் அடைந்து விற்கிரயம் செய்யப்பட்டு, அதன் பின் 2 to 5 மனுதார்கள்/2 to 5 பிரதிவாதிகள் இதே பரிகாரத்தைச் சொல்லி திண்டுக்கல் அடிசனல் சப் கோர்ட்டில் O.S.NO.364/2012 என வழக்கிட்டு தள்ளுபடியான பின்னிட்டு அதன்மேல் A.S.NO. 52/2018 ல் மேல்முறையீடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மீண்டும், மீண்டும் அதே பரிகாரத்தைக் கேட்டு வழக்கிட்டுள்ள மனுதார்களுக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை என தெரிந்து கொண்டே இந்த

பிரதிவாதிகளிடம் ஏதாவது பணம் பறிக்கும் நோக்கத்துடன் கடந்த 40 ஆண்டுகளாக நீதிமன்றத்திற்கு அலைக்கழிப்பு செய்து வருகிறார்கள். மனுதார்கள் நல்ல எண்ணத்துடன் வழக்கு தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கை நடத்தவும் முன் வராமல் தள்ளுபடிக்கு விட்டு விட்டு "ஒரே வார்த்தையில் 1ம் மனுதாருக்கு காய்ச்சல் ஏற்பட்டு வர முடியவில்லை" என்று சொல்லி மனுச் செய்திருப்பது நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணடிப்பதுடன் இந்த எதிர்மனுதாரர்களை அலைக்கழிவு செய்வதின் மூலம் நீதிமன்ற நடைமுறையை துஷ்பிரயோகம் செய்து வருகிறார்கள். மனுதார்களுக்கு வழக்கை நடத்த அனுமதிக்கும்-பட்சம் இந்த மனுதாரர்களும் இன்னும் பல ஆண்டுகளுக்கு இவர்களின் வாரிசுகளும் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு அலைவதின் மூலம் தங்களது அன்றாட பிழைப்பு பாதிக்கப்பட்டு கஷ்ட, நஷ்டம் ஏற்படும். மனுவை ஏற்றுக் கொள்வதற்கு எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. எனவே இந்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இந்த மனு அனுமதிக்கத்தக்கதா**?** இல்லையா**?** என்பதேயாகும்.

5. மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 9 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

6. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் எனவும், வழக்கின் வாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி அசல் வழக்கானது வாதி தரப்பு விசாரணைக்காக கடந்த 10.07.2023 தேதியில் வாய்தா போடப்பட்டிருந்ததென்றும் அன்றைய இந்த மனுதாரர்களின் தரப்பில் வருகையின்மையின் காரணமாக அசல் வழக்கானது தள்ளுபடி செய்து உத்திரவிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி வாய்தா தேதியில் இந்த மனுதாரருக்கு காய்ச்சல் ஏற்பட்டு உடல் நிலை சரியில்லாமல் இருந்ததனால் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் ஆஜராக முடியவில்லை என்றும், மேற்படி செய்கை வேண்டு மென்றே ஏற்படுத்தப்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டது என்றும் இந்த வழக்கில் முதல்நிலை நோக்கும் சமநிலை வாய்ப்பும் தங்களுக்கு உண்டு என்றும் எனவே, மேற்படி வழக்கு தள்ளுபடி செய்து வழங்கப்பட்ட உத்திரவினை ரத்து செய்து வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க அனுமதியளிக்கவேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இதற்கு முன் திண்டுக்கல் டி.மு. கோர்ட்டில் முன்னிடப்பட்ட அசல் வழக்கு O.S.NO.695/1984 ல் ஏற்பட்ட முதல் நிலைத் தீர்ப்பானை மற்றும் இறுதி நிலைத் தீர்ப்பானையின்படி E.P.NO. 261/2008 ல் ஒப்படப்புக்கு மனுச் செய்து 1 முதல் 3 எதிர்மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தங்களுக்குண்டான பாகத்தை ஒப்படப்பு பெற்று சுவாதீனம் அடைந்து விற்கிரயம் செய்யப்பட்டு, அதன் பின் 2 to 5 மனுதார்கள்/2 to 5 பிரதிவாதிகள் இதே பரிகாரத்தைச் சொல்லி திண்டுக்கல் அடிசனல் சப் கோர்ட்டில் O.S.NO.364/2012 என வழக்கிட்டு தள்ளுபடியான பின்னிட்டு அதன்மேல் A.S.NO. 52/2018 ல் மேல்முறையீடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதென்றம் மீண்டும், மீண்டும் அதே பரிகாரத்தைக் கேட்டு வழக்கிட்டுள்ள மனுதார்களுக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதில்லை என தெரிந்து கொண்டே இந்த பிரதிவாதிகளிடம் ஏதாவது பணம் பறிக்கும் நோக்கத்துடன் கடந்த 40 ஆண்டுகளாக நீதிமன்றத்திற்கு அலைக்கழிப்பு செய்து வருகிறார்கள் என்றும் வாய்தா தேதியன்று 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் நீதிமன்றத்தின் முன் ஆஜராகவில்லை என்று சொல்லியிருப்பது பொய் என்றும் இந்த எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் இவ்வாறு வழக்கிற்கு மேல் வழக்காக தாக்கல் செய்துகொண்டிருப்பதாகவும் எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8. இந்நிலையில் கடந்த 10.07.2023ம் தேதியன்று வாதி தரப்பு விசாரணைக்காக மனுதாரர்கள்/வாதிகள் இந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜராகாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்திருப்பதை காணமுடிகின்றது. மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது. இந்த மனுவினை தாக்கல் செய்வதற்கு முன்னர் இந்த மனுதாரர்களால் இம்மனுவினை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 22 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரிய இடைநிலை மனு எண் 2/2024 ஆனது இந்நீதிமன்றத்தால் காலதாமதம் மன்னிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மனு மற்றும் வழக்கின் சந்தர்ப்ப சூழ்நிலைகளை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர்கள்/வாதிகளுக்கு அசல் வழக்கினை மேல்நடத்துவதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதி, அவ்வாறே இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும், இருந்தபோதும் இந்த மனுவினால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர்கள்/வாதிகள், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.1,000/-த்தை செலவுத்தொகையாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று நாட்களில் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு மூன்று நாட்களுக்குள் மனுதாரர்கள்/வாதிகள், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையை செலுத்தாத பட்சத்தில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 19.03.2025,

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாளான இன்று திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.03.14 16:31:26 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.03.14 16:31:33 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
திண்டுக்கல்.
இ.ம.எண்.03/2024 உள் அசல்
(வழக்கு எண்.2/2021)
உத்தரவு நாள் 14/03/2025
அசல்/நகல் உத்தரவு